**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 16/2025**

**வழக்கு சாட்சி PW-10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.பிரசன்னா வெங்கடேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அழகர்சாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | சென்னை | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 20th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரக அறுவை சிகிச்சை பிரிவில் இரண்டாம் ஆண்டு முதுநிலை பட்டம் பயின்று வருகிறேன். கடந்த 2022ம் ஆண்டு நான் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை மருத்துவராக பணியில் இருந்தபோது, 30.03.2022ம் தேதி இரவு 09.55 மணிக்கு 21 வயது மதிக்கத்தக்க ராஜேஷ் என்பவர் மேல் சிகிச்சைக்காக வந்தார். அவர் ஏற்கனவே அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக வந்தார். சுரேஷ்குமார் என்ற மருத்துவர் அவருக்கு சிகிச்சை அளித்தார்.

அவருக்கு நெஞ்சு பகுதியின் இடது புறம் ஒரு குத்துகாயமும், வலது புறம் 2 குத்துகாயங்களும் இருந்தது. வலது புற நெஞ்சுபகுதியில் 3 சிராய்ப்பு காயங்களும் இருந்தது. நெஞ்சின் நடுப்பகுதியில் ஒரு தையலிடப்பட்ட காயம் இருந்தது. மேலும் சில சிராய்ப்பு காயங்கள் உடம்பில் ஆங்காங்கே இருந்தன. அவருக்கு அன்று எக்ஸ்-ரேயானது நெஞ்சு பகுதி, இடுப்பு பகுதி, வயிற்று

பகுதி, தலை ஆகியவற்றிற்கு எடுக்கப்பட்டது. சீ.டீ.ஸ்கேனானது, நெஞ்சுபகுதி, தலைப்பகுதி, கழுத்து மற்றும் முகம் ஆகிய இடங்களுக்கு எடுக்கப்பட்டன. நெஞ்சு பகுதியில் சீ.டீ.ஸ்கேன் எடுத்ததில் இடது நுரையீரல் மற்றும் அதன் சுவற்றிற்கிடையில் காற்று மற்றும் இரத்தம் கோர்த்திருந்தது மற்றும் நுரையீரலில் இரத்தக்கட்டு இருந்ததாக நுண்கதிர் நிபுணர் பிரவீன் சான்று வழங்கினார். அதன் பொருட்டு இருதய அறுவை சிகிச்சை நிபுணர் அவர்களின் கருத்துரை பெறப்பட்டது. அவரது கருத்துரையின் அடிப்படையில் இடது பக்க நுரையீரல் மற்றும் அதன் சுவற்றிற்கிடையே டியூப் (ICD) பொருத்தப்பட்டு, அவர் தொடர் அறுவை சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்தார். மேலும், 08.04.2022 அன்று அவரது சொந்த விருப்பத்தின் பேரில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்படுவதற்கு முன் அவருக்கு பொருத்தப்பட்ட ICD டியூப் மீண்டும் எக்ஸ்–ரே எடுக்கப்பட்டதில், அவரது நுரையீரல் விரிவாக்கம் நன்றாக இருப்பது தெரிய வந்ததால், ICD டியூப் எடுக்கப்பட்டது. ராஜேஷ் என்பவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை விபரக் குறிப்புகள் அ.சா.ஆ.10 ஆகும்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் என்னை விசாரித்தார் என்றால் 28.07.2022 அன்று என்னை விசாரித்தார். ஆய்வாளர் விசாரித்ததை எழுதிக்கொண்டாரா? என்றால் எனக்கு தெரியாது. நான் ஆய்வாளரிடம் Treatment Particulars கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காயம்பட்டவரின் காயத்தின் தன்மை குறித்து கருத்துரு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சி சென்னை சிட்டி சிவில் நீதிமன்றம் காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. S.Visalakshi, Assistant Programmer சென்னை சிட்டி சிவில் நீதிமன்றம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:50:45 +0530